சுருக்கம்

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – திரு.உ.சுந்தர்ராஜ் – வரித்தண்டலராக கருணையடிப்படையில் 12.01.2018 முற்பகல் முதல் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை

அரசாணை (3ப) எண்.14

நாள்: 30.06.2020
(திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, ஆனி–16)

படிக்கப்பட்டது:

1. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.2975/2017/ப2, நாள்.10.01.2018.
2. பேரூராட்சிகளின் இயக்குநர் கடித ந.க.எண்.9477/ 2018/அ9, நாள்.10.08.2018.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018

*****

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளின்படி, திருநெல்வேலி மாவட்டம், களக்காடு பேரூராட்சியில் இரவுக் காவலராகப் பணிபுரிந்தபோது 24.02.2015–ல் பணியிடைக் காலமான திரு.மு.உச்சினிமாகாளி என்பவரின் மகனும் வாரிசுதாரருமான திரு.உ.சுந்தர்ராஜ் என்பவர் கருணையடிப்படையில் வரித்தண்டலராக திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பேரூராட்சியில் பணி நியமனம் செய்யப்பட்டு, 12.01.2018 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தனியரின் பணியினை அவர் வரித்தண்டலராக பணியில் சேர்ந்த நாளான 12.01.2018 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசினைக் கோரியுள்ளார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. மேற்காணும் சூழலில், திருநெல்வேலி மாவட்டம், களக்காடு பேரூராட்சியில் இரவுக் காவலராக பணிபுரிந்தபோது 24.02.2015–ல் பணியிடைக் காலமான திரு.மு.உச்சினிமாகாளி என்பவரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக நாங்குநேரி வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையிலும் மற்றும் இது தொடர்பான ஆவணங்களை பரிசீலினை செய்ததின் அடிப்படையிலும் இறந்த அரசு ஊழியரின் வாரிசான திரு.உ.சுந்தர்ராஜ் என்பவருக்கு திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பேரூராட்சியில்

கருணையடிப்படையில் வரித்தண்டலராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்ட நிலையில், அவரது பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 12.01.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யக் கோரும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, கருணை அடிப்படையில் வரித்தண்டலராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.உ.சுந்தர்ராஜ் என்பவரது பணியினை 12.01.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஆணையிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், திரு.உ.சுந்தர்ராஜ் என்பவர் வரித்தண்டலர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நடைமுறையிலுள்ள விதிகளின்படி வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அதனை பெற அவர் தகுதியுடையவராகிறார்.

6. மேலே பத்தி 4-ல் ஆணையிடப்பட்டுள்ளதை மேற்படி தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.14332/ஜி2/2020-1, நாள் 15.06.2020-ல் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறையின் அ.சா.எண்.8105/ட்டி.1/2020-1, நாள் 09.06.2020-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹர்மந்தர் சிங்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
திரு.உ.சுந்தர்ராஜ், சுரண்டை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக).
பேரூராட்சிகளின் இயக்குநர்,
8வது தளம், நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28.
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)

**நகல் :-**
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை,
சென்னை – 600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி.1) துறை,
சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஜி.2)துறை,
சென்னை – 600 009.
சார்பு செய்யப்படுகிறது இருப்புக் கோப்பு / உதிரி நகல்.
அ.ஆறுமுகம்

செயல் அலுவலர்
தேர்வு நிலை பேரூராட்சி,
சுரண்டை

ந.க.எண் 2975/2017/அ2.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி பிரிவு அலுவலர் 30/6/2020
நாள். 04.08.2020

பெறுநர்.
திரு. உ.சுந்தர்ராஜ்.
வரித்தண்டலர்.
சுரண்டை பேரூராட்சி
[செயல் அலுவலர் மூலமாக]

சார்வு செய்யப்படுகிறது.

உதவி இயக்குநர்
(பேரூராட்சிகள்)
திருநெல்வேலி.